23.07.2024.
O.S.No. 124/2017
**திரு/திருமதி. நவீன்குமார் Pw1**
**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு 2வது பிரதிவாதி குறுக்கு விசாரணை.**

நான் 12ம் வகுப்பு படித்துள்ளேன். செங்கல் வியாபாரமும் தேங்காய் வியாபாரமும் செய்துவருகிறேன். 1ம் பிரதிவாதி மனோகரன் என் தகப்பனார். நானும் 1ம் பிரதிவாதியும் ஒரே முகவரியில் உள்ளோம் என்றால் வெவ்வேறு முகவரியில் வசிக்கிறோம். நானும் 1ம் பிரதிவாதி பள்ளியில் படிக்கும்போது ஒன்றாக இருந்தோம் எப்போது பள்ளி படிப்பு முடித்தோம் என்றால் 2005ல் முடித்தேன். 2016ல் திருமணம் முடித்தேன். 2010ம் ஆண்டு முதல் நானும் 1ம் பிரதிவாதியும் இரு வேறு முகவரியில் வசிக்கிறோம். நானும் 1ம் பிரதிவாதியும் தனி தனியாக வசித்து வருவதால் தனித்தனியே ஆதார் அட்டை வாக்காளர் அடையாள அட்டை குடும்ப அட்டை ஆகியவை உள்ளனவா என்றால் தனி தனியாக உள்ளது. என் தகப்பனார் அரசு ஊரியர். காவல் துறையில் சார்பு ஆய்வாளராக இருந்து ஓய்வு பெற்றார். நான் வழக்கு சொத்தை கிரையம் வாங்க வழக்கு தாக்கல் செய்தேன். வேறு என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் கிரைய முன் பணத்தை திரும்ப கேட்டு கொடுக்காததால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் வேலூர் மாவட்டத்திலும் 2ம்பிரதிவாதி காஞ்சிபுரத்திலும் குடியிருக்கிறோம். 2ம் பிரதிவாதியை எவ்வாறு எனக்கு தெரியும் என்றால் 1ம் பிரதிவாதியான என் அப்பா மூலம் தெரியும். 1ம் பிரதிவாதிக்கும் 2ம் பிரதிவாதிக்கும் ஏதேனும் வழக்குகள் உண்டா என்றால் எனக்கு தெரியாது. நான் முகவர் மூலமாக பணத்தை கொடுத்த நிலையில் அந்த பணம் விற்பனையாளரை போய் சேர்ந்ததா என்றால் நான் அதனை உறுதி செய்யவில்லை நான் கேட்டதற்கு கொடுத்ததாக முகவர் சொன்னார். நான் வழக்கு தொடுப்பதற்கு சுமார் 7 ஆண்டுகளக்கு முன்பிலிருந்து வருமானவரி செலுத்திவருகிறேன். எனக்கு நிதியாண்டிற்கும் வருமான வரி கணக்கு ஆண்டிற்கும் இடையே வித்தியாசம் தெரியுமா என்றால் தெரியாது. பொதுவாக ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 வரை உள்ள வரவு செலவு கணக்குகளை அடுத்த ஆண்டு ஏப்ரல் 1ம்தேதி வருமான வரிகணக்கு காட்டுவேன் என்றால் சரிதான்.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)